கற்றாய்ந்தொழுகு

வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்

# சாதனையாளர் கௌரவிப்பு

# 2025

# V/ SINNADAMPAN BHARATHY VIDYALAYAM

# NERDUNKERNY

# ANNUAL PRIZE DAY

# 2025

# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய சின்னடம்பன்
பாரதி கலையகம் வாழியவே
அறிவுடன் ஆற்றலும் இன்பமும் ஈகையும்
உரியவர் ஊற்றிடும் ஊக்கமதாய்

களனிகள் வாவிகள் கவின் பெறு வனப்புகழ்
சூழ்ந்திடும் கலையகம் வாழியவே
கனிவளம் பனைவளம் நிறைந்திடும் ஊரினில்
விளங்கிடும் கலையகம் வாழியவே

எண்ணுமெழுத்தும் கற்றிடுவோம்
ஈடில்லாப் பெரும் புகழ் பெற்றிடுவோம்
அறிவியற் கலையுடன் அழகியற் கலைகளும்
ஆங்கிலமும் இங்கு கற்றிடுவோம்

ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோமே
பெற்றோரும் அதிபரும் ஆசிரியர் குழாமும்
ஆண்டவன் அருள் பெற வாழ்த்திடுவோம்.

# மகுடவாசகம்

## “கற்றாய்ந்தொழுகு”

# Motto

# “LEARNING TO PURITY”

## தூரநோக்கு
## VISION

**“மாறிவரும் உலகின் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம்”**

## பணிக்கூற்று
## MISSION

**“திட்டமிடப்பட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினூடாக இருக்கின்ற வளங்களை ஒன்றிணைத்து அரப்பணிப்புள்ள சேவையை வழங்கி தரமான மாணவ சமூகத்தை உருவாக்குவோம்”**

# பரிசளிப்பு விழாக்குழு

- தலைவர் : திரு செ.ஜெயபாலசிங்கம்
- செயலாளர் : திருமதி பிருந்தாவனிதை மதனகுமார்
- இணைச்செயலாளர் : திருமதி சிந்துஜா செந்தீபன்
- பொருளாளர் : திரு சி.சிந்துஜன்
- உறுப்பினர்கள் : செல்வி க.கிருபைநாயகி

  திரு ச.துஷிகரன்

  திருமதி பவிதா தவராசா

  திருமதி சாளினி பிரியதர்ஷன்

  திருமதி பிரேமினா செந்தூரன்

  திரு செ.குகவேலவராஜ்

  திருமதி சுசீலா பாஸ்கரன்

  திருமதி சத்தியபாமா நுமேஸ்குமார்

  திருமதி சந்திரவதனி அரவிந்தன்

  திருமதி தானுஸா மயூரன்

  திரு எ.துவாரகன்

  திரு பா.கஜீபன்

  திருமதி கம்சிகா பசீலன்

  திரு சி.ஜெயந்தன்

  திரு மா.ரகுவரன்

# அதிபர் அறிக்கை

வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தின் மாணவ சாதனையாளர்களை அடையாளப்படுத்தி அதனை ஓர் ஆவணமாக்கி அதனூடாக சாதனையாளர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நோக்கோடு 2025 ஆம் ஆண்டு பாடசாலை வரலாற்றின் மிக நீண்ட காலத்தின்பின் ஆசிரியர்களது முயற்சியாலும் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் உதவியுடனும் இப் பரிசளிப்புவிழாவை நடாத்துவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது பாடசாலை வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட அதி கஷ்டப்பிரதேசத்தில் அமைந்துள்ள தரம் 01 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்களைக் கொண்ட 1C தரத்திலுள்ள பாடசாலை ஆகும். இங்கு சின்னடம்பன், நயினாமடு ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவைக் கொண்ட நயினாமடு, பெரியமடு, ஆயிலடி, சின்னடம்பன், இராசபுரம், மற்றும் சடவன்குளம் ஆகிய ஆறு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். மேலும் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் கடமையாற்றிவருகின்றனர்.

1997ஆம் ஆண்டு மற்றும் 2008 ஆம் ஆண்டு ஆகிய இரு காலகட்டங்களில் நாட்டிலேற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக இப்பிரதேச மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த நிலையில் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் பாடசாலைச் சொத்துக்கள், வளங்கள் என்பன அழிவுற்று மீண்டும் 2010 ஆம் ஆண்டின் பின் தனது சொந்த இடத்தில் இயங்கிவருகின்றது. இடப்பெயர்வின் போது இப்பிரதேச மக்கள் பல பொருளாதார, உயிர் இழப்புக்களைச் சந்தித்ததன் விளைவாக இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடத்திற்குத் திரும்பாத பலர் நகரப்பகுதிகளிலும், சிலர் வெளிநாடுகளிலும் குடியேறியதன் காரணமாக மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது.

மேலும் எமது பாடசாலையின் பௌதீக மற்றும் கல்வி அபிவிருத்திகளைப் பார்க்கும்போது இன்று ஓரளவு அடிப்படைத் தேவைக்கான பௌதீக மற்றும் ஆளணி வளத்துடன் காணப்படுகின்றது. கல்வி அபிவிருத்தியைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகள் திருப்திகரமான வளர்ச்சிப் போக்கினைக் காட்டி நிற்கின்றது.

இப்பரிசில் நாள் கடந்த காலங்களில் தேசிய மட்ட பரீட்சைகளான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த)ப் பரீட்சை, க.பொ.த(உ/த)ப் பரீட்சை போன்றவற்றில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் இணைபாட விதானச்செயற்பாடுகளில் வலய, மாகாண மட்டங்களில் பிரகாசித்த மாணவர்களது சாதனைகளைக் கருத்திற் கொண்டு இப் பரிசில் நாள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றது.

மேற்படி சாதனையாளர்களை உருவாக்குவதற்கு எமது பாடசாலைக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையிலான வலயக்கல்வி அலுவலகம் மற்றும் தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பாக சுசீலன் பவுண்டேசன், சந்திரசேகரம் அறக்கட்டளை, ACT FOUNDATION , RADNAM FOUNDATION மற்றும் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட சமூக ஆர்வலர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள், உதவிகள் என்பவற்றை எமக்கு வழங்குகின்றனர். அவர்களுக்கு இந்த இடத்திலே எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இன்றைய நிலையில் எமக்கு ஒருசில பௌதீக, ஆளணித் தேவைகள் தேவையாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில் விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், ஒன்றுகூடல் மண்டபம், கணிணி கூடம் மற்றும் பாடசாலை பாதுகாப்புச் சுவர் போன்றவற்றுடன் தொகுதிப்பாடங்கள் மற்றும் க.பொ.த (உ/த) கலைபிரிவிற்கான ஓரிரு பாட ஆசிரியர்களின் தேவையும் காணப்படுகிறது. இத் தேவைப்பாடுகளும் பூர்த்தியாகும் பட்சத்தில் மேலும் கல்வி வளர்ச்சியை அடையமுடியும்.

மேலும் எதிர்காலங்களில் ஆண்டுதோறும் மாணவ சாதனையாளர்களைப் பாராட்டி கௌரவிப்பதாக எண்ணியுள்ளோம். இதனூடாக மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் பல்துறைகளிலும் சாதிக்கின்றபோது இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் தாம் தமது பணியைச் சிறப்பாக செய்திருக்கின்றோம் என்ற ஆத்ம திருப்தியை ஏற்படுத்தி அதனூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை உத்வேகத்துடன் கொண்டுசென்று எமது பாடசாலையின் நோக்கை அடைய எதிர்பார்க்கின்றேன்.

மேலும் இன்றைய சாதனையாளர்களைப் பாராட்டுவதோடு தொடர்ந்துவரும் காலங்களிலும் அனைவரும் ஒவ்வொரு துறைகளிலும் வெற்றிபெற வாழ்த்துவதோடு இச்சாதனையாளர்களை உருவாக்கிய அத்தனை ஆசிரியர்களுக்கும் பயிற்றுனர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு செ.ஜெயபாலசிங்கம்
அதிபர்,
வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்.

# வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தின் வரலாறு

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள வவுனியா மாவட்டத்திலே வயல்சூழ் நிலப்பரப்புக்களாலும் குளங்களினாலும் நிறைந்து காணப்படுகின்ற வவுனியா வடக்கு மண்ணிலே வவுனியா நகரிலிருந்து நாற்பத்தொரு கிலோ மீற்றர் தொலைவிலே உருவாக்கப்பட்ட கல்விச்சாலை வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் ஆகும்.

1959.09.14 ஆம் திகதி சின்னடம்பன் கிராம முன்னேற்றச் சங்கத்தால் தற்போது பொதுநோக்கு மண்டபம் அமைந்துள்ள காணிக்குள் வாசிகசாலைக்கு அருகே $60 \times 20$ அடி அளவுகொண்ட தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டு மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதற்காக திரு சின்னையா வையாபுரிநாதன் அவர்களை ஆசிரியராக நியமித்து இப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது.

இக் காலகட்டத்தில் கிராம முன்னேற்றச் சங்கத்தன் தலைவராக திரு நாகநாதி தர்மலிங்கம் அவர்களும் உறுப்பினர்களாக திரு பொன்னர் செல்லையா, திரு இராமு பேரம்பலம், திரு இராமு சயம்பு, திரு இராமு நடராசா, திரு கதிர்காமு காசிப்பிள்ளை, திரு சரவணமுத்து கணபதிப்பிள்ளை, திரு சின்னவட்டர் ஐயம்பிள்ளை, திரு சின்னையா செல்லையா ஆகியோர் செயற்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தா.சிவசிதம்பரம் அவர்களின் சிபாரிசின் அடிப்படையில் 1961.07.18 ஆம் திகதி இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்றுக்கொண்டது. இவ்வாறு அரச பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டவேளை திரு சின்னையா வையாபுரிநாதன் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். 1962 ஆம் ஆண்டு செல்வி சோமசுந்தரம் திலகவதி அவர்கள் ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார். அக்காலப்பகுதியில் திரு முத்துலிங்கம் அவர்கள் வித்தியாதரிசியாக (CEO) கடமையாற்றினார். 1964 தொடக்கம் 1967 வரையான காலப்பகுதியில் இப்பாடசாலையில் இருபத்தைந்து மாணவர்கள் கல்வி பயின்றனர்.

அதிபர் திரு சி.வையாபுரிநாதன் அவர்களைத் தொடர்ந்து திரு சிவப்பிரகாசம், திரு பொன்னையா, திரு துரைராசா, திரு அமிர்தலிங்கம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர். இப்பாடசாலைச் சூழலில் காணப்பட்ட காடு துப்புரவு செய்யப்பட்டு 1967 ஆம் ஆண்டு தற்போது பாடசாலை இயங்கிக்கொண்டிருக்கும் காணிக்குள் புதிய பாடசாலைக் கட்டடம் நிர்மானிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

1968 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையைச் சேர்ந்த ஆசிரியர் திரு கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தவேளை இப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஒன்பது வரையான மாணவர்கள் கல்விகற்றனர். இக்

காலப்பகுதியில் விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள், தமிழ்மொழித் தினப் போட்டிகள் என்பவற்றில் மாணவர்கள் பங்குபற்றியதாக அறியமுடிகிறது.

1977.05.01 இல் திரு A.V கணேசலிங்கம் அவர்கள் இப்பாடசாலையின் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இக்காலப்பகுதியில் இப் பாடசாலை தரம் II வகைப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இப்பாடசாலை மாணவன் பேரம்பலம் இராசகுலசிங்கம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார். மீண்டும் 1982 இல் பேரம்பலம் மல்லிகா, பூதத்தம்பி அரவிந்தன், முருகேசு விக்கினேஸ்வரன் ஆகிய மாணவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம், வ/ஓமந்தை மத்திய கல்லூரி என்பவற்றில் இடைநிலைக் கல்வி, உயர்தரக்கல்வி ஆகியவற்றைக் கற்று பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்ற திரு ஐ.இராஜரட்னம் அவர்கள் 1983.06.01 இல் இப் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

1986 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் செல்வன் த.நாகராசா என்ற மாணவன் சித்தியடைந்தார். 1988.05.16 இல் அதிபர் திரு ஐ.இராசரத்தினம் அவர்கள் இடமாற்றம்பெற்றுச் செல்ல திரு யோ.யோகநாதன் அவர்கள் 1988.05.17 தொடக்கம் 1988.07.13 வரை அதிபராகக் கடமையாற்றினார். அவரைத் தொடர்ந்து திரு M.S.பத்மநாதன் அவர்கள் 1988.07.14 தொடக்கம் 1990.10.31 வரை அதிபராகவும் திரு A.K.சண்முகவேல் அவர்கள் 1990.11.01 தொடக்கம் 1996.01.21 வரை அதிபராகவும் கடமையாற்றினர். இக்காலகட்டத்தில் சின்னடம்பன் அ.த.க பாடசாலையாக இருந்த பாடசாலைப் பெயர் சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரி திரு ச.அருளானந்தம் அவர்களால் 1993.06.16 இல் புதிய பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

நீண்டகால இடைவெளியின் பின்னர் 1994.04.18 அன்று இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி இப்பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றது.

1996.01.22 ஆம் திகதி இப் பாடசாலையின் அதிபராக திரு அருளம்பலம் விநாயகமூர்த்தி அவர்கள் தமது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இவரைத் தொடர்ந்து திரு ஆ.தனராஜ் அவர்கள் 1998.09.01 தொடக்கம் 2011.07.25 வரையான காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றினர். இக்காலப்பகுதியில் (1997) உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இப்பிரதேச மக்கள் பாரிய இடப்பெயர்வு ஒன்றைச் சந்தித்தனர். இதன் காரணமாக இப் பாடசாலையானது 1997.05.13 ஆம் திகதி முதல்

சொந்த இடத்தில் இயங்கமுடியாத சூழ்நிலையில் இப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக வாழ்ந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மு/பெரியபுளியங்குளம் அ.த.க பாடசாலையில் 1997.07.02 ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியது. தொடர்ச்சியான இடப்பெயர்வு காரணமாக 1999.04.26 முதல் மு/உயிலங்குளம் பாடசாலை வளாகத்தில் தற்காலிகமாக இயங்கிய இப்பாடசாலை 2000 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீளவும் இப்பிரதேச வாழ் மக்கள் மீள் குடியேறியதன் காரணமாக 2000.08.28 மீண்டும் பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கத்தொடங்கிளது.

2003.04.23 இல் GIZ நிறுவனத்தின் நிதி உதவியுடன் $110 \times 25$ அடி அளவு வகுப்பறைக் கட்டடத்தொகுதிக்கான அத்திவாரம் இடப்பட்டது. 2003.06.04 முதல் க.பொ.த(உ/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு பதின்மூன்று மாணவர்கள் கலைப்பிரிவில் கல்வி பயின்றனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் வரலாற்றுச்சாதனையாக பாடசாலையைப் பெருமிதம் கொள்ளவைக்கும் தடமிடலாக 2006 இல் நடைபெற்ற க.பொ.த(உ/த) பரீட்சையில் இப் பாடசாலை மாணவன் செல்வன் பூ.செல்வநீதன் “3A" சித்திபெற்று வலயத்தில் முதலாவது மாணவன் என்ற பெருமையைத் தனதாக்கிக்கொண்டார்.

மீண்டும் இந் நாட்டில் ஏற்பட்ட இறுதி யுத்தத்தினால் இப் பிரதேச மக்கள் பாரிய இடப்பெயர்வைச் சந்தித்ததன் காரணமாக 2008.07.29 ஆம் திகதி முதல் இப்பிரதேச மக்கள் தற்காலிகமாக தங்கியிருந்த கிளிநொச்சி மாவட்டத்தின் திருவையாறு மகா வித்தியாலயத்தில் மாலைநேரப் பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. தொடர்ச்சியான இடப்பெயர்வு காரணமாக மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் 2008.09.15 முதல் 2009.01.26 வரை இயங்கிவந்த இப்பாடசாலை உக்கிரமடைந்த போர்ச் சூழலால் 2009.01.27 முதல் தற்காலிகமாக மூடப்பட்டது. இறுதி யுத்தத்தின் காரணமாக பாடசாலை சொத்துக்கள் யாவும் அழிவடைந்த நிலையில் பாடசாலைச் சம்பவத்திரட்டுப் புத்தகம் மட்டும் அதிபர் திரு ஆ.தனரரஜ் அவர்களால் பாதுகாப்பாக எடுத்துச்செல்லப்பட்டது.

திரு ப.கெங்கநாதன் அவர்கள் 2011.07.26 தொடக்கம் 2015.07.01 வரை அதிபராகக் கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் 2011 ஆம் ஆண்டு செல்வி தெய்வேந்திரம் சுதர்மிலா என்ற மாணவி தேசிய விளையாட்டுப்போட்டியில் 100 m, 200 m, 400 m ஆகிய போட்டிகளில் பங்குபற்றினார். 2012.07.13 இல் பாடசாலை வளாகத்தின் முகப்பில் சரஸ்வதி சிலை வைக்கப்பட்டது.

2012 இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி வி.றேனுகா 164 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்தார். இவ் ஆண்டு பாதுகாப்பான பாடசாலை என்ற தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட போட்டியில் எமது பாடசாலை வலய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று விருதினையும் பெற்றுக்கொண்டது. வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் 2012 ஆம் ஆண்டு நடாத்திய மரதன் ஓட்டப் போட்டியில் 15 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை செல்வன் சி.சோபிராஜ் அவர்களும் 17 வயது ஆண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தை செல்வன் த.வாசவன் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

நீண்டகால இடைவெளியின் பின்னர் 2012.12.06 இல் பாடசாலையின் பரிசளிப்புவிழா நடைபெற்றது. மேலும் இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய செல்வி வி.ரஞ்சிதமலர் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் செல்வி நி.நிரோஜா அவர்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவுசெய்யப்பட்டனர்.

2013 ஆம் ஆண்டு வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான அரை மரதன் ஓட்டப் போட்டியில் செல்வி த.தர்ஷினி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

2014 ஆம் ஆண்டுக்கான ஆரம்பப்பிரிவு விரைவு கணிதப்போட்டியில் தரம் 03 செல்வி சிவசேகரம் அர்ச்சனா வலய நிலையில் இரண்டாம் இடத்தினைப் பெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு சுற்றாடல் நேயப் பாடசாலைப் போட்டியில் எமது பாடசாலை பரிசிலைப் பெற்றுக்கொண்டது.

2015 ஆம் ஆண்டு ஆரம்பப்பிரிவு விரைவுகணிதப் போட்டியில் தரம் ஐந்தைச் சேர்ந்த செல்வி பஞ்சலிங்கம் யதீஷா என்ற மாணவி வலய நிலையிலும், மாகாண நிலையிலும் முதலாம் இடத்தினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமைசேர்த்தார். மேலும் தரம் 04 செல்வி சி.அர்ச்சனா வலய நிலையில் மூன்றாம் இடத்தினையும் தரம் 02 செல்வி ம.யதுர்சிகா வலய நிலையில் முதலாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டனர்.

2015.07.02 ஆம் திகதி திரு சங்கரப்பிள்ளை சிவராஜா அவர்கள் அதிபராகக் கடமையேற்றார். இக்காலத்தில் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி பஞ்சலிங்கம் யதீஷா என்ற மாணவி 179 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 14 ஆவது இடத்தினைப் பெற்று தனது சாதனையை நிலைநாட்டினார்.

2015 இல் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் செல்வி விவேகானந்தராசா குபேந்தினி அவர்கள் “7A, 2C" தர

சித்தியினைப் பெற்று பாடசாலையின் வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டினார்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற வலயமட்ட விளையாட்டுப் போட்டியில் கடற்கரைக் கரப்பந்துப் போட்டியில் முதலாம் இடத்தினை 18 வயது பெண்கள் பிரிவும் இரண்டாம் இடத்தினை 20 வயது ஆண்கள் பிரிவும் பெற்று மாகாணப் போட்டிக்குத் தெரிவாகினர்.

2018.08.03 அன்று சின்னடம்பன் கிராமத்தைச் சேர்ந்த அமரர் முத்துராசா விநாயகமூர்த்தி (செல்வம்) அவர்களின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினரால் பாடசாலை மைதானத்தில் அரங்கு ஒன்றை நிர்மானித்து மாணவர்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 100% சித்தியாகவும் 2018 ஆம் ஆண்டில் 64% சித்தியாகவும் காணப்பட்டது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 2015 இல் 100% சித்தியாகவும் 2016 இல் 36% சித்தியாகவும் 2017 இல் 42% சித்தியாகவும் 2018 இல் 38% சித்தியாகவும் காணப்பட்டது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 2016 இல் 60% சித்தியாக பல்கலைக்கழகத்திற்கு ஒரு மாணவன் தெரிவுசெய்யப்பட்டும் (மாவட்ட நிலை 14) 2017 இல் 100% சித்தியாகவும் காணப்பட்டது.

2018.12.14 ஆம் திகதி திரு சங்கரப்பிள்ளை சிவராஜா அவர்கள் ஓய்வுபெற்றதையடுத்து இப்பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு சண்முகவேல் துஷிகரன் அவர்கள் 2018.12.15 ஆம் திகதி முதல் 2019.02.27 ஆம் திகதி வரை அதிபருக்கான கடமையை (ACTING PRINCIPAL) செய்துவந்துள்ளார்.

2019.02.28 இல் இப் பாடசாலையின் அதிபராக திரு செல்லையா ஜெயபாலசிங்கம் அவர்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டு தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

$110 \times 25$ அடி அளவுடைய வகுப்பறைக் கட்டடமானது அமரர் க.பரந்தாமன் (வவுனியா வடக்கு பிரதேச செயலர்) அவர்களின் முயற்சியின் பயனாக இந்திய அரசின் நிதி உதவி ரூபா அறுபத்து மூன்று இலட்சத்தில் (6 300 000) வட மாகாணக் கல்வி அமைச்சின் அனுமதிக்கமைய கட்டப்பட்ட இக்கட்டடத்தை திரு செல்லையா ஜெயபாலசிங்கம் அவர்களது தலைமையில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு க.சத்தியசீலன், வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் ஆகியோர்

முன்னிலையில் இந்தியத் துணைத் தூதர் திரு ச.பாலச்சந்திரன் அவர்களால் 2019.07.19 அன்று பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

2020.09.29 ஆம் திகதியன்று ஒழுங்குபடுத்தப்பட்ட காலைக்கூட்ட அரங்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்னிலையில் பாவனைக்காக பாடசாலை அதிபர் திரு செ.ஜெயபாலசிங்கம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

நவீன கற்றல் கற்பித்தல் வசதிகளை ஏற்படுத்தும் நோக்கோடு இப்பாடசாலையின் முதலாவது திறன் வகுப்பறையை ரட்ணம் பவுண்டேசன் மற்றும் பாடசாலை நலன்விரும்பி திரு சி.தவமோகன் ஆகியோரின் உதவியால் 2022.01.06 ஆம் திகதி திரு சி.தவமோகன் அவர்களது தாயாரான திருமதி மல்லிகாதேவி சிவசுப்பிரமணியம் அவர்களால் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு து.லெனின் அறிவழகன் அவர்கள் முன்னிலையில் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

சந்திரசேகரம் அறக்கட்டளையின் ஸ்தாபகர் திரு சந்திரசேகரம் பரமலிங்கம் அவர்களால் மேலும் ஒரு திறன்வகுப்பறைக்கான SAMRT TV வழங்கப்பட்டு 2022.05.20 ஆம் திகதி மேற்படி ஸ்தாபகரின் பிரதிநிதி ஓய்வுநிலை அதிபர் திரு செ.செந்தில்நாதன் அவர்களால் மாணவர்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது. மேலும் அதே தினத்தில் ஆசிரியர்களின் வாண்மையை விருத்திசெய்யும் நோக்கோடு GEMP செயற்றிட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட வாண்மைவிருத்தி அலகு திறந்துவைக்கப்பட்டது.

வடக்கு மகாணக் கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின்கீழ் அமைக்கப்பட்ட $110 \times 25$ அடி அளவுடைய வகுப்பறைக் கட்டடம் ஆனது 2022.10.27 இல் அதிபர் திரு செல்லையா ஜெயபாலசிங்கம் அவர்களின் அழைப்பின் பெயரில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் திரு இ.பிரதாபன் அவர்களின் முன்னிலையில் வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு து.லெனின் அறிவழகன் அவர்களால் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

பாடசாலையின் பழைய மாணவன் திரு வல்லிபுரம் உதயசங்கர் அவர்களால் தனது தாயாராகிய அமரர் வல்லிபுரம் பூலோகம் அவர்கள் நினைவாக ஏற்கெனவே அமைப்பட்டிருந்த காலைக் கூட்ட அரங்கிற்கான கூரையை அமைத்து 2022.11.16 இல் மாணவர்களது பாவனைக்காக கையளிக்கப்பட்டது. மேலும் அவுஸ்ரேலியா குயின்ஸ்லாந்து உறவுகள் அறக்கட்டளையால் மூன்று மலசலகூடங்கள் செப்பனிடப்பட்டு 2023.03.17 இல் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

நோர்வே வசந்தம் மிஷன் அறக்கட்டளையின் உதவியுடன் 2023.06.03 இல் பாடசாலையின் முதலுதவிப் படையணி புதிதாக உருவாக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் நிதியில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் செயற்றிட்டத்துடன் அதற்கு மேலதிகமாக 22.11.2023 முதல் ACT FOUNDATION இனரால் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2025.05.15 இல் பாடசாலையின் சாரணர் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கோடு இப் பாடசாலையின் வரலாற்றில் முதற் தடவையாக சாரணி அணியினருக்கான சின்னம் சூட்டும் நிகழ்வானது அதிபர் திரு செ.ஜெயபாலசிங்கம் அவர்களது தலைமையில் உதவி மாவட்ட ஆணையாளர் திரு மகேந்திரன் சபேசன் மற்றும் திரி சாரணர் பிரிவின் உதவி மாவட்ட ஆணையாளர் திரு பிரான்சிஸ் ஹெர்ஷோன் ஆகியோர் கலந்துகொண்டு இருபத்தாறு (26) மாணவர்களுக்கு சாரணியப் பொறுப்பாசிரியர்கள் திரு பா.கஜீபன், திருமதி சாளினி பிரியதர்ஷன் ஆகியோரின் பங்குபற்றலுடன் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் சின்னம் சூட்டப்பட்டது.

2025 முதலாம் தவணை தொடக்கம் பாடசாலை தவணைப் பரீட்சைப் புள்ளிகளின் சராசரியாக 75% இனைப் பெற்ற மாணவர்களுக்கு OPTIMI சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

மேலும் பாடவிதானப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு சித்திவீதம் 64% ஆகவும் 2019 இல் 67% சித்தியும் 2020 இல் 90% சித்தியாக வெட்டுப்புள்ளிக்குமேல் செல்வன் ஜெகநாதன் ஹரிஸ் என்ற மாணவனும் 2021 இல் 100 % சித்தியும் 2022 இல் 67% சித்தியும் 2023 இல் 62.5% சித்தியுடன் வெட்டுப்புள்ளிக்கு மேல் செல்வி நாதன் மதுமிதா என்ற மாணவியும் 2024 இல் 75% சித்தியும் காணப்படுகிறது.

க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2018 இல் 38% சித்தியும் 2019 இல் 50% சித்தியும் 2020 இல் 50% சித்தியும் 2021 இல் 80% சித்தியும் 2022 இல் 63.6% சித்தியும் 2023 இல் 52% சித்தியும் காணப்பட்டது.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் பாடசாலை வரலாற்றில் வரலாறு காணாத சாதனையாக செல்வி செந்தில்குமரன் தமிழருவி அவர்கள் “7A, 2B" தர சித்திகளைப் பெற்று சாதனை படைத்தார்.


க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2019 இல் 75% சித்தியும் 2020 இல் 25% சித்தியும் கிடைத்து பல்கலைக்கழகத்திற்கு செல்வி சுதாகரன் பவித்திரா என்ற மாணவி தெரிவுசெய்யப்பட்டார். 2021 இல் 100% சித்தியும் 100% ஆன மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு செல்வி வி.இலட்சியா, செல்வி கு.கவிந்தினி ஆகியோர் முறையே தென்கிழக்கு மற்றும் யாழ் பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவாகி பாடசாலை வரலாற்றின் சாதனையை நிலைநாட்டினர். 2022 இல் 100% சித்தியும் 2023 இல் 50% சித்தியும் 2024 இல் மீண்டும் 100% சித்தியும் காணப்படுகிறது.

கல்வி அமைச்சின் 31/2014 இலக்க " பாடசாலை எந்தளவிற்கு தரமானது? " என்ற பாடசாலையின் பண்புத்தரத்தை மதிப்பீடு செய்யும் சுற்றிக்கைக்கமைய வலயக்கல்வி அலுவலகத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட வெளிவாரி மதிப்பீட்டின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு மதிப்பீட்டில் 54 புள்ளிகளையும் (சாதாரணம்) 2023 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 65 புள்ளிகளையும் (நன்று) 2024 ஆம் ஆண்டு 72 புள்ளிகளையும் (மிக நன்று) பெற்று 2025.06.03 இல் நடாத்தப்பட்ட மதிப்பீட்டின்படி 73 புள்ளிகளையும் பெற்று மிகநன்று எனும் நிலையில் எமது பாடசாலை தனது வளர்ச்சிப்போக்கைக் காட்டி நிற்கிறது.

இவ்வாறாக எமது பாடசாலையின் கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட மற்றும் பௌதீகவள மேம்பாடுகள் என்பன உயர்நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன…


**வெளிவாரி மதிப்பீடு**

| மதிப்பீடு நடைபெற்ற ஆண்டு | வழங்கப்பட்ட புள்ளி | |
|---|---|---|
| 2019 | 54 | சாதாரணம் |
| 2023 | 65 | நன்று |
| 2024 | 72 | மிக நன்று |
| 2025 | 73 | மிக நன்று |



EXTERNAL EVALUATIONS
80
70
60
50
40
30
20
10
0
MARKS
2019
2023
2024
2025
YEAR

# வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தில் அதிபர்களாகக் கடமையாற்றியோர் விபரங்கள்

| இல | அதிபர் பெயர் | சேவைக் காலப்பகுதி | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | திரு சி.வையாபுரிநாதன் | 1961.07.18 - 1962.05.01 | |
| 2. | திரு சி.சிவப்பிரகாசம் | 1962.05.02 - 1963.04.30 | |
| 3. | திரு பொன்னையா | 1964 - | காலப்பகுதி தொடர்பான முழுயைான சான்றுகளைப் பெற முடியவில்லை |
| 4. | திரு துரைராசா | - 1967 | |
| 5. | திரு அமிர்தலிங்கம் | 1967 - 1968 | |
| 6. | திரு கந்தையா | 1968 - 1973 | |
| 7. | திரு வீரசிங்கம் | 1973 - | |
| 8. | திரு வேலும்மயிலும் | - 1977.04.30 | |
| 9. | திரு A.V கணேசலிங்கம் | 1977.05.01 - 1983.05.31 | |
| 10. | திரு ஐ.இராஜரட்னம் | 1983.06.01 - 1988.05.16 | |
| 11. | திருமதி யோ.யோகநாதன் | 1988.05.17 - 1988.07.13 | |
| 12. | திரு M.S.பத்மநாதன் | 1988.07.14 - 1990.10.31 | |
| 13. | திரு A.K சண்முகவேல் | 1990.11.01 - 1996.01.21 | |
| 14. | திரு அ.விநாயமூர்த்தி | 1996.01.22 - 1998.08.31 | |
| 15. | திரு ஆ.தனராஜ் | 1998.09.01 - 2011.07.25 | ACTING PRINCIPAL |
| 16. | திரு ப.கெங்கநாதன் | 2011.07.26 - 2015.07.01 | |
| 17. | திரு ச.சிவராசா | 2015.07.02 - 2018.12.14 | |
| 18. | திரு ச.துஷிகரன் | 2018.12.15 - 2019.02.27 | ACTING PRINCIPAL |
| 19. | திரு செ.ஜெயபாலசிங்கம் | 2019.02.28 - 2025.07.27 | |



**திரு சி.வையாபுரிநாதன்**
1961.07.18 - 1962.05.01



**திரு சி. சிவப்பிரகாசம்**
1962.05.02 - 1963.04.30

**திரு பொன்னையா**
1964 -

**திரு துரைராசா**
- 1967

**திரு அமிர்தலிங்கம்**
1967 - 1968

**திரு கந்தையா**
1968 - 1973

**திரு வீரசிங்கம்**
1973 -

**திரு வேலும்மயிலும்**
- 1977.04.30



திரு **A.V.** கணேசலிங்கம்
1977.05.01 - 1983.05.31



திரு ஐ.இராஜரட்னம்
1983.06.01 - 1988.05.16

திருமதி யோ.யோகநாதன்
1988.05.17 - 1988.07.13



திரு **M.S** பத்மநாதன்
1988.07.14 - 1990.10.31



திரு **A.K** சண்முகவேல்
1990.11.01 - 1996.01.21



திரு அ.விநாயகமூர்த்தி
1996.01.22 - 1998.08.31



**திரு ஆ.தனராஜ்**
1998.09.01 - 2011.07.25



**திரு ப.கெங்கநாதன்**
2011.07.26 - 2015.07.01



**திரு ச.சிவராசா**
2015.07.02 - 2018.12.14



**திரு ச.துஷிகரன்**
2018.12.15 - 2019.02.27



**திரு செ.ஜெயபாலசிங்கம்**
2019.02.28 - 2025.07.27

# பாடசாலையின் மனித வளங்கள்

# HUMAN RESOURCE OF THE SCHOOL

## ✧ ஆரம்பப்பிரிவு மாணவர் பற்றிய தகவல்கள் - 2025

| தரம் | சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **1** | 1 | 02 | 00 | 02 |
| **2** | 1 | 05 | 03 | 08 |
| **3** | 1 | 05 | 03 | 08 |
| **4** | 1 | 02 | 02 | 04 |
| **5** | 1 | 07 | 01 | 08 |
| மொத்தம் | **05** | **21** | **09** | **30** |

## ✧ கனிஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர் பற்றிய தகவல்கள் 2025

| தரம் | சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **6** | 1 | 04 | 09 | 13 |
| **7** | 1 | 07 | 12 | 19 |
| **8** | 1 | 04 | 01 | 05 |
| **9** | 1 | 10 | 05 | 15 |
| **10** | 1 | 06 | 13 | 19 |
| **11** | 1 | 03 | 06 | 09 |
| மொத்தம் | **07** | **34** | **46** | **80** |

## ✧ சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர் பற்றிய தகவல்கள் - 2025

| தரம் | சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 12 கலை | 1 | 04 | 06 | 10 |
| 13 கலை | 1 | 01 | 01 | 02 |
| மொத்தம் | **02** | **05** | **07** | **12** |

## ✧ மொத்த மாணவர் எண்ணிக்கை

| | ஆரம்பப்பிரிவு | இடைநிலைப்பிரிவு | உயர்தரப்பிரிவு |
|---|---|---|---|
| **ஆண்** | 21 | 34 | 05 |
| **பெண்** | 09 | 46 | 07 |
| **மொத்தம்** | 30 | 80 | 12 |

## அதிபர் விபரம் - 2025

முழுப்பெயர் - திரு செல்லையா ஜெயபாலசிங்கம்

சேவையும் தரமும் - இலங்கை அதிபர் சேவை தரம் I

## ஆசிரியர்கள் விபரம் - 2025

| இல | முழுப் பெயர் | கற்பிக்கும் பாடம் |
|---|---|---|
| 1. | திருமதி பிருந்தாவனிதை மதனகுமார்<br>செல்வி. கந்தையா கிருபைநாயகி<br>திருமதி கம்சிகா பசிலன் | தமிழ் |
| 2. | திரு. சண்முகவேல் துசிகரன் | ஆரம்பப்பிரிவு |
| 3. | திருமதி. புவிதா தவராசா | இந்து சமயம் |
| 4. | திருமதி சிந்துஜாெ சந்தீபன் | விஞ்ஞானம் |
| 5. | திரு. சி. ஜெயந்தன் | புவியியல் |
| 6. | திருமதி. சாளினி பிரியதர்ஷன் | குடியியற்கல்வி |
| 7. | திருமதி. பிரேமினா செந்தூரன் | கர்நாடக சங்கீதம் |
| 8. | திருமதி சந்திரவதனி அரவிந்தன் | ஆரம்பப்பிரிவு |
| 9. | திருமதி. அனிற்றா ஜென்சிகா மயூரன் | வரலாறு (தற்காலிக இணைப்பு) |
| 10. | திரு செ. குகவேலவராஜ் | ஆங்கிலம் |
| 11. | திருமதி. சுத்தியபாமா நுமேஸ்குமார் | ஆரம்பப்பிரிவு |
| 12. | திரு சி. சிந்துஜன் | கணிதம் |
| 13. | திருமதி M.A பாத்திமா நிப்சிஜா | ஆரம்பபிரிவு |
| 14. | திரு.எ. துவாரகன் | சுகாதரமும் உடற்கல்வியும் |
| 15. | திரு.பா. கஜீவன் | வரலாறு |
| 16. | திருமதி. சுசீலா பாஸ்கரன் | ஆரம்பப்பிரிவு |
| 17. | திருமதி தானுஷாமயூரன் | தகவல் தொடர்பாடல்<br>தொழில்நுட்பம் |
| 18. | திருமதி கம்சிகா பசீலன் | தமிழ் |

## ✧ ஆசிரியர் மொத்த எண்ணிக்கை

| | ஆரம்பப் பிரிவு | இடைநிலைப் பிரிவு |
|---|---|---|
| **ஆண்** | 01 | 05 |
| **பெண்** | 04 | 09 |
| **மொத்தம்** | 05 | 14 |

## ✧ விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் விபரம்

| இல | முழுப் பெயர் | நியமனப் பதவி |
|---|---|---|
| 01 | திரு மாரிமுத்து ரகுவரன் | விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் |

### 2025 இல் இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம்

- திருமதி மஞ்சுளா சத்தியசீலன்
- திரு. தர்மகுலசிங்கம் தர்சன்
- திருமதி. சிந்துஷா செந்தீபன்


### 2025 இல் புதிதாக இணைந்த ஆசிரியர் விபரம்

- திருமதி தானுஷா மயூரன்
- திருமதி. சுசீலா பாஸ்கரன்
- திருமதி. கம்சிகா பசீலன
- திரு. சி .ஜெயந்தன்

# கலைத்திட்ட அடைவுகள் (2010 – 2025)

✧ **தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை**

| வருடம் | தோற்றியோர் | 70 புள்ளிக்கு மேற்பட்டோர் | வெட்டுப்புள்ளியை அடைந்தோர் | மாவட்ட நிலை | சித்தி வீதம் | கற்பித்த ஆசிரியர் |
|---|---|---|---|---|---|---|
| 2010 | 02 | 01 | | | 50% | |
| 2011 | 04 | 00 | | | 00% | |
| 2012 | 07 | 07 | 01 | 69 | 100% | சாந்தமூர்த்தி |
| 2013 | 04 | 04 | | | 100% | ப.ஜெயந்தினி |
| 2014 | 07 | 07 | | | 100% | சாந்தமூர்த்தி |
| 2015 | 03 | 03 | 01 | 14 | 100% | ப.ஜெயந்தினி |
| 2016 | 06 | 06 | | | 100% | ப.ஜெயந்தினி |
| 2017 | 08 | 08 | | | 100% | ப.ஜெயந்தினி |
| 2018 | 11 | 07 | | | 64% | ச.துஷிகரன் |
| 2019 | 12 | 08 | | | 67% | ச.மஞ்சுளா |
| 2020 | 11 | 10 | 01 | | 90% | தி.பிரியதர்சினி |
| 2021 | 11 | 11 | | | 100% | ப.ஜெயந்தினி |
| 2022 | 06 | 04 | | | 67% | நு.சத்தியபாமா |
| 2023 | 08 | 05 | 01 | | 62.5 % | ச.துஷிகரன் |
| 2024 | 08 | 06 | | | 75% | ச.மஞ்சுளா |




✧ **வெட்டுப்புள்ளியை அடைந்தோர்**

| **இல** | **மாணவர் பெயர்** | **ஆண்டு** | **மாவட்ட நிலை** |
|---|---|---|---|
| **1.** | வி.ரேனுஜா | 2012 | 69 |
| **2.** | ப.யதீசா | 2015 | 14 |
| **3.** | ஜெ.ஹரீஸ் | 2020 | |
| **4.** | நா.மதுமிதா | 2023 | |

## ✧ க.பொ.த சாதாரணதரப் பரீட்சை

| வருடம் | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|
| 2010 | 12 | 02 | 16% |
| 2011 | 11 | 02 | 18% |
| 2012 | 07 | 01 | 14% |
| 2013 | 08 | 01 | 12.5% |
| 2014 | 07 | 01 | 14% |
| 2015 | 01 | 01 | 100% |
| 2016 | 14 | 05 | 36% |
| 2017 | 13 | 05 | 38% |
| 2018 | 16 | 06 | 37.5% |
| 2019 | 09 | 05 | 55.5% |
| 2020 | 08 | 04 | 50% |
| 2021 | 05 | 04 | 80% |
| 2022 | 11 | 07 | 63.6% |
| 2023 | 21 | 09 | 42.8% |
| 2024 | | | |





| 2010 | | |
|---|---|---|
| **SE.NO** | **NAME** | **RESULTS** |
| 1. | Y.KIRUPA | B 3C 4S |
| 2. | K.SAJEERTHAN | A B 6C |
| | | |
| **2011** | | |
| 1. | T.NILOKSAN | 3B 2C S |
| 2. | L.PARAMESVARAN | 2A 3B C S |
| | | |
| **2012** | | |
| 1. | K.THAYALAN | A 4C 2S |
| | | |
| **2013** | | |
| 1. | S.NILAKSHAN | 3A B 2C 2S |
| | | |
| **2014** | | |
| 1. | K.KOPIKAN | B 3C 3S |
| | | |
| **2015** | | |
| 1. | V.KUPENTHINY | 7A 2C |
| | | |
| **2016** | | |
| 1. | Y.KALAIVANAN | 4C 3S |
| 2 | K.THULAKSAN | B 4C 3S |
| 3 | M.NIKSHAN | 4C 3S |
| 4 | S.MATHUSAN | B 2C 5S |
| 5 | T.ANUSIYA | B 4C |

| | | |
|---|---|---|
| 6 | T.THARANY | A 3B C 2S |
| | | |
| **2017** | | |
| 1 | K.SATHURSAN | 2A 4B 2C |
| 2 | S.PAVITHIRA | A B 2C 4S |
| 3 | V.AJITHTHA | 2A B 2C 4S |
| 4 | S.RAKINY | 4C 4S |
| 5 | L.YAKSALA | 5A B 3C |
| | | |
| **2018** | | |
| 1 | I.THENUJA | 3A 3B C 2S |
| 2 | S.KIRUSHA | 2A 2B 3C S |
| 3 | K.KAVINTHINY | 2B 4C S |
| 4 | V.RENUJA | 5A 2B C S |
| 5 | S.SIVASINY | 3A 2B 2C S |
| 6 | V.ILADSIYA | B 5C S |
| | | |
| | | |
| **2019** | | |
| 1 | R.THALAKSAN | 3B 4C 2S |
| 2 | V.DIVAKAR | B 2C 4S |
| 3 | K.VIJIYANTHINY | B 4C 2S |
| 4 | V.VINOTHINY | 2A B 4C 2S |
| 5 | R.MENAKA | 3B 3C 2S |
| | | |
| **2020** | | |
| 1 | D.DILAKSAN | 5C 2S |
| 2 | S.NITHUSAN | 2B 5C S |
| 3 | T.SATHURYA | 2A 3B 2C S |
| 4 | V.LAKSHANA | 4B C 3S |
| | | |
| **2021** | | |
| 1 | I.NATHEEPA | 2B 5C 2S |
| 2 | A.LEKHA | B 4C 2S |
| 3 | S.ANUSHA | B 2C 4S |
| 4 | M.SHALINI | 3B 3C 3S |
| | | |
| **2022** | | |
| 1 | S.THIRISAGINY | 2B 2C 4S |
| 2 | K.SANKEERTHTHAN | A B 4C S |
| 3 | S.HAMSHAJINY | 4A 2B 2C S |
| 4 | N.RASIKA | 2A 3B 3C S |
| 5 | B.LAKSANA | 2A 3C 2S |
| 6 | T.DILAKSANA | A 4C 3S |

| | | |
|---|---|---|
| 7 | B.PIRAPALINY | A 4B 4S |
| | | |
| **2023** | | |
| 1 | P.SANSAJAN | B 3C 3S |
| 2 | V.PAVARASAN | A 3B 3C 2S |
| 3 | A.ANPARASAN | 3C 3S |
| 4 | S.SARUJAN | A 3B 4C S |
| 5 | S.TAMILARUVI | 7A B C |
| 6 | A.ARKHALIYA | 3A 3B 2C S |
| 7 | V.KINTHUSHA | B 4C 4S |
| 8 | A.SANSHIKHA | 2B 3C 3S |
| 9 | T.NILAJINY | 3B 2C 3S |

## ✧ க.பொ.த உயர்தரம்

| வருடம் | விண்ணப்பித்தோர் தொகை | தோற்றியோர் தொகை | 3 பாடம் சித்தியடைந்தோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 2010 | 05 | 04 | 03 | 75% |
| 2011 | 01 | 01 | 01 | 100% |
| 2012 | 03 | 03 | 03 | 100% |
| 2013 | 02 | 02 | 02 | 100% |
| 2014 | 05 | 05 | 05 | 100% |
| 2015 | 01 | 01 | 00 | 00% |
| 2016 | 05 | 04 | 03 | 60% |
| 2017 | 03 | 03 | 03 | 100% |
| 2018 | - | - | - | - |
| 2019 | 04 | 04 | 03 | 75% |
| 2020 | 04 | 04 | 01 | 25% |
| 2021 | 02 | 02 | 02 | 100% |
| 2022 | 03 | 03 | 03 | 100% |
| 2023 | 02 | 02 | 01 | 50% |
| 2024 | 03 | 03 | 03 | 100% |




## பல்கலைக் கழக அனுமதி பெற்றோர் விபரம்

| 2010 | | | | |
|---|---|---|---|---|
| **SE.NO** | **NAME** | **RESULTS** | **DISTRIC RANK** | **UNIVERSITY** |
| 1. | YOGANATHAN NIROJAN | 3B | 27 | SABRAGAMUVA |
| 2. | THARMALINGAM SENTHEEPAN | 2C,S | 465 | SOUTH-EASTERN |
| | | | | |
| **2011** | | | | |
| 1 | YOGARTHINAM KAMSHIKA | B2C | 31 | CHOOSEN NATIONAL COLLEGE OF EDUCATION |
| 2 | YOGANATHAN NIROJINI | A,2B | 02 | |
| | | | | |
| **2012** | | | | |
| 1 | LINGARASA RANJITHAMALAR | ABC | 76 | JAFFNA |
| | | | | |
| **2013** | | | | |
| 1 | THEVENDIRAM SUTHARSAN | 3B | 51 | JAFFNA |
| **2014** | | | | |
| 1 | LINGARASA PARAMESVARAN | ABC | 69 | JAFFNA |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **2015** | | | | |
| 1 | THARMALINGAM LAVANYA | B,2C | 231 | JAFFNA |
| **2016** | | | | |
| 1 | SUTHAKARAN NILAKSHANA | A,2B | 14 | |
| | | | | |
| | | **2021** | | |
| | KUMRAKULASINGAM KAVINTHINY | A,2B | 74 | JAFFNA |
| | VIVEKANANTHARASA ILADSIYA | A,B,C | 95 | EASTERN |

# தேசிய கல்வியியற் கல்லூரிகளிற்கு தெரிவானோர்.

| 2010 | | | | |
|---|---|---|---|---|
| **SE.NO** | **NAME** | **RESULTS** | **DISTRIC RANK** | **COLLEGE** |
| 1. | YOGANATHAN NIROJINI | 3B | 63 | VAVUNIYA PRIMARY |
| | | | | |
| **2011** | | | | |
| 2 | YOGRATHINAM KAMSHIKA | B2C | 31 | ADDALASAENI TAMIL |
| | | | | |
| | | **2015** | | |
| | VINAYAGAMOORTHY SUVENTHINY | BCS | 341 | VAVUNIYA PHYSICAL EDUCATION |

# 2025 ம் ஆண்டு முதலாம் தவணையின் அடிப்படையில் பரிசு பெறும் மாணவர் விபரம்

| தரம் | மாணவர் பெயர் |
|---|---|
| 02 | பா.பிரணவி |
| | தா.யதுர்சன் |
| | |
| 03 | பி.பிரணிதா |
| | ல.கிஷாந்தினி |
| | |
| 05 | இ.றஜீகன் |
| | |
| 06 | வ.அஞ்சனா |
| | |
| 07 | கா.ஜிந்துஜா |
| | |
| 09 | கா.தரணிகா |
| | |
| 10 | ச.மதுரயன் |
| | |
| 11 | ம.லிதுசன் |
| | |
| 12 | செ.தமிழருவி |

## இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள்

## 2019

| தமிழ் மொழித் தினம் | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 04 | வி.வினோதினி | சிறுகதை ஆக்கம் | 02ம் இடம் |
| 04 | இ.தலக்சன் | தனிநடிப்பு | 03ம் இடம் |
| 05 | ஐ.தேனுஜா | கவிதை ஆக்கம் | 03ம் இடம் |
| | | | |
| **பெருவிளையாட்டு (கடற்கரைப்பந்து )** | | | |
| 20 வயதின் கீழ் ஆண்கள் | ம.நிக்சன்<br>த.வன்னிராஜ் | | 02ம் இடம் மாகாணமட்டம்<br>02ம் இடம் தேசியமட்டம் பங்கேற்பு |
| | | | |
| **சமூக விஞ்ஞானப் போட்டி** | | | |
| தரம் 11 | வி.வினோதினி | | 02ம் இடம் |

## 2020

| பெருவிளையாட்டு (கரப்பந்து ) | | |
|---|---|---|
| 16 வயதின் கீழ் பெண்கள் | பா.தீபிகா, நா.ரசிகா, ம.லியானி, பா.பிரபாளினி, ஐ.நதீபா, அ.லேகா, வி.லாவண்யா | 03 ஆம் இடம் மாகாண மட்டம் |
| 18 வயதின் கீழ் பெண்கள் | கி.விஜயந்தினி, வி.விநோதினி, அ.மேனகா, செ.வனோஜா, செ.கௌசிகா, கு.கவிந்தினி | 02 ஆம் இடம் வலய மட்டம் |
| 20 வயதின் கீழ் பெண்கள் | சு.பவித்திரா, சி.ராகினி, தா.ரஜனிகா, சு.கிருஷா, வி.இலட்சியா, வி.அஜித்தா, ஐ.தேனுஜா | 01 ஆம் இடம் வலய மட்டம் |
| 20 வயதின் கீழ் ஆண்கள் | ஈ.சுஸ்மிதன், ம.சுமன், வி.டிவாகர், சி.தனுஜன், ச.சங்கவன், கி.கிருசாந்தன், பா.சுலக்சன், சி.சதீஸ்வரன் | 03 ஆம் இடம் வலய மட்டம் |
| **கடற்கரைப்பந்து** | | |
| 20 வயதின் கீழ் பெண்கள் | சு.பவித்திரா, வி.அஜித்தா | 01 ஆம் இடம் வலய மட்டம் |
| 20 வயதின் கீழ் ஆண்கள் | மு.சுமன், வி.டிவாகர் | 03 ஆம் இடம் வலயமட்டம் |

| மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் | | | |
|---|---|---|---|
| 20 வயதின் கீழ் பெண்கள் | சு.கிருசா | 400 m | 02 ஆம் இடம் வலய மட்டம் |
| | தா.ரஜனிகா, சு.கிருசா, வி.இலட்சியா, சி.ராகினி | $4 \times 100$ | 02 ஆம் இடம் வலய மட்டம் |

**2022**

| தமிழ் மொழித் தினம் | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 04 | கெ.ஸானுகா | கவிதை ஆக்கம் | 01ம் இடம் |
| 04 | ச.ஹம்சாயினி | கட்டுரையாக்கம் இலக்கியம் நயத்தல் | 03ம் இடம் |
| 04 | நாட்டார் பாடல் (குழு) பா.பிரபாளினி, ச.ஹம்சாயினி, நா.ரசிகா, ந.அகலியா, ச.மதுசன், செ.திரிசாயினி | | 03ம் இடம் |
| | | | |
| **வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள்** | | | |
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 16 | வ.கிந்துஷா | 100m | 03ம் இடம் |
| 16 | ர.பிரசாந் | 800m | 03ம் இடம் |
| 18 | ர.ரசிகா | 100m | 03ம் இடம் |
| 16 | 4x400m,4x100m | | 02ம் இடம் |
| 18 | 4x400m,4x100m | | 03ம் இடம் |
| | | | |
| **பெரு விளையாட்டு** | | | |
| **பிரிவு** | **போட்டி** | | **வலய மட்டம்** |
| 16 ஆண் | கரப்பந்து | | 03ம் இடம் |
| 16 பெண் | கரப்பந்து | | 03ம் இடம் |
| 18 பெண் | கரப்பந்து | | 03ம் இடம் |

**2023**

| தமிழ் மொழித் தினம் | | |
|---|---|---|
| **பிரிவு** | **போட்டி** | **வலய மட்டம்** |
| கீழ்ப்பிரிவு<br>தரம் 09 | குழு இசை<br>ரு.சுதர்சினி, சி.ஜெனனி,<br>க.கரிசனா, இ.தர்சிகா,<br>சி.அபிர்ணா, பா.டிலைக்சிகா,<br>யோ.சபீனா, அ.போயினி,<br>பா.ஜெசிந்தா | 03ம் இடம் |
| கீழ்ப்பிரிவு | நாட்டார் பாடல்<br>ரு.சுதர்நினி, க.கரிசனா,<br>கி.ஓவியன், சி.சாருஜன்,<br>ர.பிரசாந், இ.தர்மிகா | 03ம் இடம் |
| | | |
| **பெரு விளையாட்டு** | | |
| **பிரிவு** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 16 ஆண் | கரப்பந்து | 03ம் இடம் |
| 16 பெண் | கரப்பந்து | 03ம் இடம் |
| 18 பெண் | கரப்பந்து | 01ம் இடம் |
| | | |
| ர.பிரசாந் | வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட அரை மரதன் | மாகாண மட்டம்<br>09ம் இடம் |
| | | |
| 17 வயதின் கீழ் ஆண்கள் | கடற்கரைப்பந்து | 01 ஆம் இடம் வலய மட்டம் |
| 17 வயதின் கீழ் பெண்கள் | கடற்கரைப்பந்து | 01 ஆம் இடம் வலய மட்டம் |
| 20 வயதின்கீழ் பெண்கள் | கடற்கரைப்பந்து | 01 ஆம் இடம் வலய மட்டம் |

| சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழக கலாசார இலக்கியப் போட்டிகள் | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | | | |
| கீழ்ப்பிரிவு | **மாணவர் பெயர்** | **போட்டி** | **நிலை** |
| இடைநிலைப் பிரிவு | ய.தனுஸ்கா | பேச்சு | 02ம் இடம் |
| இடைநிலைப் பிரிவு | செ.லிதர்சிகா | அறிவிப்பாளர் | 02ம் இடம் |
| மேற்பிரிவு | க.கரிஷனா | நாட்டார் பாடல் | 01ம் இடம் |
| மேற்பிரிவு | செ.தமிழருவி | பேச்சு | 01ம் இடம் |
| | செ.தமிழருவி | அறிவிப்பாளர் | 02ம் இடம் |

**2024**

| **தமிழ் மொழித் தினம்** | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 5 | மோ.சாலினி | இலக்கிய திறனாய்வுப் போட்டி | 01ம் இடம் |
| 5 | ஐ.நதீபா | இலக்கிய விமர்சனப் போட்டி | 03ம் இடம் |
| | | | |
| **வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள்** | | | |
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 12 | ர.டனுஸ்காந் | நீளம் பாய்தல் | 01ம் இடம் |
| 18 | வ.கிந்துஷா | 400m | 02ம் இடம் |
| 18 | ர.பிரசாந் | 3000m | 03ம் இடம் |
| 20 | செ.திரிசாயினி | 5000m | 02ம் இடம் |
| 20 | செ.திரிசாயினி | 1500m | 02ம் இடம் |
| 20 | செ.திரிசாயினி | 800m | 02ம் இடம் |
| | | | |
| **பெருவிளையாட்டு** | | | |
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 20 ஆண் | கு.சங்கீர்த்தன்<br>பா.கோகிலன் | கடற்கரைப்பந்து | 02ம் இடம் |
| 20 பெண் | ஐ.நதீபா<br>வ.கிந்துஷா | கடற்கரைப்பந்து | 03ம் இடம் |
| **வவுனியா மாவட்ட சேக்கிழார் மன்றம் நடாத்திய நாவலர் குரு பூசை தினத்தையொட்டி நடாத்திய போட்டிகள்** | | | |
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **நிலை** |
| மேற்பிரிவு | ஐ.நதீபா | கவிதை | 01ம் இடம் |
| மேற்பிரிவு | செ.தமிழருவி | கட்டுரை | 03ம் இடம் |
| | | | |

| வவுனியா வடக்கு பிரதேச செயலகம் நடாத்திய கலை இலக்கியப் போட்டிகள் | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **நிலை** |
| மேற்பிரிவு | ஐ.நதீபா | கவிதை | 01ம் இடம் |
| மேற்பிரிவு | செ.திரிசாயினி | சிறுகதை ஆக்கம் | 01ம் இடம் |
| மேற்பிரிவு | செ.தமிழருவி | புதுக்கவிதை | 01ம் இடம் |
| மேற்பிரிவு | மோ.சாலினி | இலக்கிய விமர்சனம்,<br>தமிழ்த் தினப்போட்டி - இலக்கியத் திறனாய்வு - பிரிவு V | 02ம் இடம்<br>01 ஆம் இடம் வலயம் |
| **மாவட்ட ரீதியில் நடாத்திய கலை இலக்கியப் போட்டிகள்** | | | |
| மேற்பிரிவு | ஐ.நதீபா | கவிதை | 01ம் இடம் |
| மேற்பிரிவு | செ.திரிசாயினி | சிறுகதை ஆக்கம் | 01ம் இடம் |
| மேற்பிரிவு | செ.தமிழருவி | புதுக்கவிதை | 01ம் இடம் |
| | செ.திரிசாயினி | பொது அறிவுப் போட்டி | |

## 2025

| பெருவிளையாட்டு | | | |
|---|---|---|---|
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **வலய மட்டம்** |
| 20 ஆண் | கு.சங்கீர்த்தன்<br>பா.கோகிலன் | கடற்கரைப்பந்து | 03ம் இடம் |
| 20பெண் | ஐ.நதீபா<br>வ.கிந்துஷா | கடற்கரைப்பந்து | 01ம் இடம் |
| 17ஆண் | ம.லிதுசன்<br>ம.கோபிதன் | கடற்கரைப்பந்து | 03ம் இடம் |
| | | | |
| **சிவராத்திரியை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி** | | | |
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **நிலை** |
| மேற்பிரிவு | செ.தமிழருவி | பேச்சு | 03ம் இடம் |
| | | | |
| **168 வது பேடன் பவல் ஞாபகார்த்த நினைவு தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகள்** | | | |
| **பிரிவு** | **மாணவர் பெயர்** | **போட்டி** | **நிலை** |
| தரம் 09 | நா.நதுமிதன் | சித்திரம் | 02ம் இடம் |
| **சான்றிதழ் பெற்றோர்** | | | |
| றொ.டிலுக்சன், மோ.றஜிந்தன், செ.லிதர்சிகா, அ.போயினி, வ.சன்ஜனா, யோ.சபீனா, ச.ஜீவிதா, தி.மகிவானன், பா.றொசாந்தன் | | | |
| | | | |

**Yarl It Hub நடாத்தும் புதிய பயணங்கள் நிலை – 1 இனை நிறைவு செய்து சான்றிதழ் பெற்றோர்.**

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| நா.நதுமிதன் | 09 |
| செ.நுகர்னி | 07 |

**அகில இலங்கை விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி**

| பிரிவு | மாணவர் பெயர் | வலய மட்டம் |
|---|---|---|
| தரம் 06 | வ.அஞ்சனா | 01ம் இடம் |

**நெடுங்கேணிக் கோட்ட விரைவு கணிதப் போட்டி**

| பிரிவு | மாணவர் பெயர் | கோட்ட மட்டம் |
|---|---|---|
| தரம் 02 | பா.பிரனவி | 03ம் இடம் |

**குழு இசை**

| பிரிவு | மாணவர் பெயர் | வலய மட்டம் |
|---|---|---|
| II | வி.விவேதினி, சி.மதுசாளினி, ஐ.டிலானி, நா.மதுமிதா, செ.கபிசாஜினி, ச.ரிலைக்சனா, ம.தசானா, சு.தர்மிகா, இ.விதுஷா | 02 ஆம் இடம் |

**நாட்டார் பாடல்**

| பிரிவு | மாணவர் பெயர் | வலய மட்டம் |
|---|---|---|
| திறந்த போட்டி | க.கரிஷனா, இ.தர்சிகா, ர.சுதர்சினி, யோ.சபீனா, சி.அபிர்ணா, செ.லிதர்சிகா | 03 ஆம் இடம் |

**இலக்கியத் திறனாய்வு**

| | | |
|---|---|---|
| பிரிவு V | ந.அகலியா | 03 ஆம் இடம் |

**மெய்வல்லுநர் போட்டிகள்**

| பிரிவு | மாணவர் பெயர் | போட்டி | வலய மட்டம் |
|---|---|---|---|
| 12 வயதின் கீழ் பெண்கள் | ம.லோசனா | 60 m | 02 ஆம் இடம் |
| 14 வயதின் கீழ் பெண்கள் | செ.கபிஷாஜினி | 60 m | 02 ஆம் இடம் |
| 20 வயதின் கீழ் பெண்கள் | வ.கிந்துஷா | 400 m | 02 ஆம் இடம் |
| | | 800 m | 02 |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆம் இடம் |
| 14 வயதின் கீழ் ஆண்கள் | ர.டனுஸ்காந் | 60 m | 02 ஆம் இடம் |
| | | நீளம் | 02 ஆம் இடம் |
| 14 வயதின் கீழ் ஆண்கள் | ம.டதுசன் | 60 m | 03 ஆம் இடம் |
| 18 வயதின் கீழ் ஆண்கள் | ர.பிரசாந் | 800 m | 03 ஆம் இடம் |
| | | 1500 m | 01 ஆம் இடம் |
| | | 3000 m | 02 ஆம் இடம் |
| 20 வயதின் கீழ் ஆண்கள் | கு.சங்கீர்த்தனன் | ஈட்டி எறிதல் | 01 ஆம் இடம் |
| | | தட்டெறிதல் | 03 ஆம் இடம் |
| | அ.அன்பரசன் | உயரம் பாய்தல் | 01 ஆம் இடம் |
| | | நீளம் பாய்தல் | 02 ஆம் இடம் |

❖ **ஆசிரியர் வாண்மைவிருத்தி அலகு**

பாடசாலையில் 2021 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் வாண்மை விருத்தி அலகு ஊடாக ஆசிரியர்களின் தரவட்டச் செயற்பாடுகள், பாட மேம்பாடடுத்திட்டமிடல்கள் என்பன சிறப்பாகநடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

❖ **மாணவர் முதலுதவிப் படையணி**

நோர்வே வசந்தம் விஷன் அறக்கட்டளையின் நிதி உதவியுடன் 2023.06.03 இல் பாடசாலையின் முதலுதவிப் படையணி புதிதாக உருவாக்கப்பட்டது. இப் படையணியைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலையின் முதலுதவிச் சேவைக்காக இயங்குநிலையிலுள்ளனர்.

❖ **மாணவர்களுக்கான போசாக்கும் உணவும்.**

கல்வி அமைச்சின் நிதியில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் செயற்றிட்டத்துடன் அதற்கு மேலதிகமாக 22.11.2023 முதல் ACT FOUNDATION இனரால் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

❖ **சாரணர் அணி**

2025.05.15 இல் பாடசாலையின் சாரணர் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கோடு இப் பாடசாலையின் வரலாற்றில் முதற் தடவையாக சாரணி அணியினருக்கான சின்னம் சூட்டும் நிகழ்வானது அதிபர் திரு செ.ஜெயபாலசிங்கம் அவர்களது தலைமையில் உதவி மாவட்ட ஆணையாளர் திரு மகேந்திரன் சபேசன் மற்றும் திரி சாரணர் பிரிவின் உதவி மாவட்ட ஆணையாளர் திரு பிரான்சிஸ் ஹெர்ஷோன் ஆகியோர் கலந்துகொண்டு இருபத்தாறு (26) மாணவர்களுக்கு சாரணியப் பொறுப்பாசிரியர்கள் திரு பா.கஜீபன், திருமதி சாளினி பிரியதர்ஷன் ஆகியோரின் பங்குபற்றலுடன் ஏனைய ஆசிரியர்கள், மாணவர்கள் முன்னிலையில் சின்னம் சூட்டப்பட்டது.

# பாடசாலையின் எதிர்கால வளத்தேவைகள்

❖ **மனித வளத்தேவை**

1. ஆசிரியர் தேவை - விஞ்ஞானம், விவசாயமும் உணவுத் தொழிநுட்பமும், சிங்களம், நடனம் (பரதம்), நாகமும் அரங்கியலும்
2. பாடசாலைக் காவலாளி
3. அலுவலக் உதவியாளர்

❖ **பௌதிக வளத் தேவைகள்**

1. விஞ்ஞான ஆய்வுகூடம்
2. கணிணிவள நிலையம்
3. நூலகம்
4. ஒன்றுகூடல் மண்டபம்
5. பாடசாலைச் சுற்றுமதில்

# அன்பளிப்புகள் வழங்கியோர்
# 2020 தொடக்கம்

| பௌதிக வளங்கள் | | | |
|---|---|---|---|
| **தொ .இல** | **ஆண்டு** | **உதவி வழங்கியோர்** | **பௌதிக வளம்** |
| 1. | 2020 | வல்லிபுரம் பூலோகம் | காலைக் கூட்ட அரங்கம் |
| 2. | 2020 | திரு சி. ஹேமசந்திரன் | கணினி மேசை |
| 3. | 2021 | ரட்ணம் அறக்கட்டளை (லண்டன்) மற்றும் திரு s.தவமோகன் கனகராயன்குளம் (லண்டன்) | திறன் வகுப்பறை |
| 4. | 2021 | வன்னி HOP நிறுவனம் மற்றும் USDF | 05 கணினிகள் |
| 5. | 2022 | திரு. சந்திரசேகரம் பரமலிங்கம் ஆயிலடி (லண்டன்) சந்திரசேகரம் அறக்கட்டளை | Smart tv |
| | 2025 | | 40 வாங்கு, 20 மேசை |
| 6. | 2023 | திரு.தெய்வேந்திரம் சுபாகரன் (செ.குகவேலவராஜ்) | பாடசாலையின் நுழைவாயில் வர்ணம் பூசுதல் |
| 7. | 2023 | உறவுகள் அறக்கட்டளை நலத்திட்டம் | 03 மலசலகூடங்கள் |
| 8. | 2023 | வசந்தம் விசன் அறக்கட்டளை (இணைப்பாளர்: த. செந்தீபன்) | முதலுதவி உபகரணங்கள் |
| 9. | 2023 | GEMP PROJECT | ஆசிரியர் வாண்மை விருத்தி அலகு |

| | | | |
|---|---|---|---|
| 10. | 2024 | வ.தயாபரன், ம.மகிழன், வி.பாலகிருஷ்ணன் | Digital clock |
| 11. | 2024 | இரத்தினசிங்கம் சத்தியசீலன், சின்னடம்பன். (பிரான்ஸ், பழைய மாணவன்) | ஆரம்பகல்வி கட்டிடத் தொகுதி வர்ணம் பூசுதல். |
| 12. | 2025 | ந.கலைச்செல்வன் (அவுஸ்ரேலியா, பழைய மாணவன்) | பிரதான மண்டபம் புனரமைப்பு |
| | **நிதி அனுசரணை** | | |
| **தொ.இல** | **ஆண்டு** | **உதவி வழங்கியோர்** | **செயற்பாடு** |
| 1. | 2020 | திரு. ந.கலைச்செல்வன் (அவுஸ்ரேலியா, பழைய மாணவன்) | 16 மாணவர்களுக்கு 10 000/=ரூபா விதம் வழங்கப்பட்டது. |
| | | | மேலதிக வகுப்பிற்காக (கணிதம், நாடகமும் அரங்கியலும்) நிதி வழங்கப்பட்டது. |
| | 2024 | | பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவர்களிற்கு தலா ஒரு லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கியமை.(200 000/= வி.இலட்சியா, கு.கவிந்தினி) |
| | 2025 | | 2023 O/L சித்தியடைந்த மற்றும் 2023ம் ஆண்டு புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அன்பளிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டது. |
| 2. | 2020 | ம.நிக்ஷன் (அவுஸ்ரேலியா, பழைய மாணவன்) | க.பொ.த உயர்தர (2021)மாணவர்களுக்கான இந்து நாகரிக பாடத்திற்கான மேலதிக வகுப்பிற்கான அனுசரணை வழங்கப்பட்டது. |
| 3. | 2021 | திரு.வி.பாலகிருஷ்ணன் (ஆசிரியர் உடற்கல்வி) | விளையாட்டு உடைகளுக்காக அனுசரணை வழங்கப்பட்டது. |
| 4. | 2022<br>2023 | திரு பேரம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா | கணிதபாட மேலதிக வகுப்பிற்கான நிதியனுசரணை |
| 5. | 2024<br>2025 | சுசீலன் அறக்கட்டளை (இணைப்பாளர்: திரு ப.யசோதரன்) | தரம் 06 - 11 மாணவர்களிற்கு மதிய உணவுடன் பிரத்தியேக வகுப்பிற்கான அனுசரணை. |
| 6. | 2024<br>2025 | **"அமரரர் வள்ளிப்பிள்ளை பேரம்பலம்"** அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் (திரு பேரம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா) | இல்ல மெய்வல்லுநர் திறனாய்விற்கான அனுசரணை (2024,2025) |

**ACT foundation நிறுவனத்தினரால் தரம் 06 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு உணவூட்டல் திட்டம் 2023ம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.**

**ஏனைய உதவிகள், கற்றல் உபகரணங்கள் வழங்கியோர்.**

1. சுசீலன் பவுன்டேசன்( இணைப்பாளர்: திரு பரராசசிங்கம் யசோதரன்)
2. வசந்தம் விசன் பவுன்டேசன் (இணைப்பாளர் திரு தர்மலிங்கம் செந்தீபன்)
3. புவனேஸ்வரி அன்பு இல்லம் : கற்றல் உபகரணம்
4. வல்லிபுரம் பூலோகம் குடும்பம்
5. திரு வி.சுஞ்சுதன் (பிரதேச சபை உறுப்பினர்)
6. திரு.செ.ரவீந்திரன் குடும்பம் (பெரியமடு - லண்டன்) )
7. LOLC நிறுவனம்
8. தங்கராசா ஐயா,ராசமணி அம்மா (தொண்டமானாறு)
9. திரு.தெய்வேந்திரம் சுபாகரன் (திரு செ.குகவேலவராஜ்)
10. YALA LABS
11. வன்னிச் சங்கம் கனடா
12. ஆசிரியர் திருமதி சோபனா கஜேந்திரன் (முன்னாள் கர்நாடக சங்கீத ஆசிரியர்)
13. திரு.பா.கஜீபன் (வரலாறு பாட ஆசிரியர்)
14. திரு.தணிகாசலம் சிவசண்முகம் (பழைய மாணவன் UK )
15. திரு ம.நிக்சன் (பழைய மாணவன் அவுஸ்ரேலியா)
16. Lyca's GNANAM Foundation
17. வ/தமிழ் மகா வித்தியாலயம் 98ம் வருட உயர்தர மாணவர்களின் நிதியம்
18. திரு.வி.பாலகிருஷ்ணன் (முன்னாள் உடற் கல்வி ஆசிரியர்)
19. திரு.நா.கிருபாகரன் (ஆசிரியர் வ/புளியங்குளம் ஆரம்ப வித்தியாலயம்)
20. திரு. இ.மோர்சிதபவன்
21. NSB Bank
22. நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்பு
23. VANNI AID CANADA
24. 9A வளாகம்

## வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலய ஆசிரியர் குழாம்



**இந்திய அரசின் நிதி உதவியில் கட்டப்பட்ட வகுப்பறைக் கட்டடம் அதிபர் திரு. செ.ஜெயபாலசிங்கம் அவர்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.க.சத்தியசீலன்,வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அன்னமலர் சுரேந்திரன் ஆகியோர் முன்னிலையில் இந்திய துணைத்தூதர் திரு.பாலச்சந்திரன் அவர்களால் 2019.07.19 ம் திகதி திறந்துவைக்கப்பட்டது.**











**வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் 2021 ம் ஆண்டின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின்கீழ் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் பாடசாலை அதிபர் அவர்களின் அழைப்பின் பேரில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் திரு. இ. பிரதாபன் அவர்களின் முன்னிலையில் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. து. லெனின்அறிவழகன் அவர்களால் 2022.10.27 ம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.**







அமரர் வல்லிபுரம் பூலோகம் அவர்களின் நினைவாக மகன் வல்லிபுரம் உதயசங்கர் அவர்களால் அமைக்கப்பட்ட காலைக் கூட்ட அரங்கிற்கான கூரை அமைத்து 2022.11.16 ல் மாணவர் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.









**சின்னடம்பன் கிராமத்தை சேர்ந்த அமரர் முத்துராசா விநாயகமூர்த்தி [செல்வம்] அவர்களின் ஞாபகார்த்தமாக குடும்பத்தினரால் நிர்மானிக்கப்பட்ட இவ்வரங்கு 2018/08/03 ம் திகதி திறந்துவைக்கப்பட்டது.**




---






















Light festival
V/Sinnadampan Bharathy Vidyalayam




Follow us On Facebook

வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்
sinnadampanbharathy@gmail.com